Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

க.கோபால கிருஷ்ணன், B.E.,
உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.43/397A, II தளம், இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி – II,திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-29595440.
email-tvlrregion@gmail.com

பெறுநர்

ஊராட்சி மன்றத் தலைவர்,
சிறுவானூர் ஊராட்சி மன்றம்,
பூண்டி ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்.1342/2021/ திருவள்ளூர்-2 நாள்.30.09.2021.

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலம் - திருவள்ளூர் - மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் -பூண்டி ஊராட்சி ஒன்றியம் - சிறுவானூர் ஊராட்சி - வேடங்கிநல்லூர் கிராமம் - சர்வே எண்கள்.109/1A, 2, 110/1, 2, 3, 4, 5, 111/3B-ல் 18935.0 ச.மீ (4.68 ஏக்கர்) பரப்பு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர். Tvl. Jyothi & Kamalakara Reddy Bapathi அவர்களின் கடிதம் நாள்.16.04.2021. மற்றும் இணையதள விண்ணப்பம் எண்.202106401412043, நாள்.25.03.2021.
2. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.13.08.2021 (சாலைகள், பூங்காக்கள், புல்வெளி மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
4. மனுதாரர். Tvl. Jyothi & Kamalakara Reddy Bapathi அவர்களின் கடிதம் நாள்.20.09.2021 (தானப்பத்திர எண்.11965/2021, நாள்.15.09.2021
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1) நாள்.09.12.2020
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017,
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
12. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் நன்செய்நில

B. Kally
R. Jyothi

தடையின்மை சான்று கடித எண்.R.Dis.No.16384/2020/N1 நாள்.28.10.2020, R.Dis.No.10470/2015/N1, நாள்.14.09.2015 மற்றும் R.Dis.No.10474/2015/N1 நாள்.14.09.2015.

13. Executive Engineer, PWD Kosathalaiyar, Basin Division WRD, Tiruvallur Letter No.DB/JDO.1/F.40.NOC/2020/150m/ Date.05.04.2021.

*****

உத்தரவு :

பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, திருவள்ளூர் - மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம், சிறுவானூர் ஊராட்சி, வேடங்கிநல்லூர் கிராமம், சர்வே எண்கள்.109/1A, 2, 110/1, 2, 3, 4, 5, 111/3B-ல் 18935.0 ச.மீ (4.68 ஏக்கர்) பரப்பு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.13.08.2021-ன் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக (தானப்பத்திர எண்.11965/2021, நாள்.15.09.2021ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.133/2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. பார்வை 9-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7-ல் கண்ட TNCDBR – 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc, as per the standards specified by the Local Body.

2. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடித மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை

உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Head of Account

"0217 Urban Development 60 - Other Urban Development Schemes - 800 Other Receipts - AS Receipts Under Land Use Conversion Charges - 27 Non Taxation fees - 09 collections".
(DPC: 0217-60-800-AS-2790)

5. பார்வை 5 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின்படி மனைகளுக்கான நன்னிலை வரி **ரூ.23,000/-(ரூபாய் இருபத்தி மூன்றாயிரம் மட்டும்)**, பரிசீலனை கட்டணம் **ரூ.29,000/-(ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்)**, பெறப்பட்டுள்ளது. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலை வரி கட்டணத்தில் **20% தொகை ரூ.5,000/-** " Armed Force **Flag Day Fund**" செலுத்தப்பட்டுள்ளது.

இணைப்பு:

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(4 தொகுப்பு மற்றும் அசல் தானப்பத்திரம்)
தானப்பத்திர எண்.11965/2021, நாள்.15.09.2021.

உதவி இயக்குநர், 30/9/2021
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருவள்ளூர் மாவட்டம்.

30.9.2021

நகல்:

1. மனுதாரர் (பத்தி ஒன்று மட்டும்)

Tvl. Jyothi & Kamalakara Reddy Bapathi
No.5, JRR House,
P.S.N. Nagar,
Selai Road,
Thriuvallur District – 602 001.

2. உதவி இயக்குநர், (ஊராட்சி மன்றத் தலைவர்,
நில அளவை துறை, சிறுவானூர் ஊராட்சி மூலமாக)
திருவள்ளூர் மாவட்டம்.
(சாலை மற்றும் பொது ஒதுக்கீட்டினை
உள்ளாட்சியின் பெயரில் வருவாய்
ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.)

3. சார்பதிவாளர், (ஊராட்சி மன்றத் தலைவர்,
திருவள்ளூர் சார்பதிவாளர் அலுவலகம், சிறுவானூர் ஊராட்சி மூலமாக)
திருவள்ளூர் மாவட்டம்

4. இருப்பு கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)

5. Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.1A, 1st Floor, CMDA Tower II,
Gandhi - Irwin Bridge Road,
Egmore, Chennai- 600 008.

13/06/24
R Jyothi

சிறுவானூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திருமதி. R. பவானி

செ.மு.ந.க. எண். 1 / சி.ஊ.ம. / 2021 நாள். 11 .10.2021

பொருள் – மனைப்பிரிவு – திருவள்ளூர் மாவட்டம் – பூண்டி ஊராட்சி ஒன்றியம் – சிறுவானூர் ஊராட்சி வேடங்கிநல்லூர் கிராமம் சர்வே எண்கள் 109/1A, 2, 110/1, 2 3, 4, 5, 111/3Bல் 18935.0 ச.மீ (4,68 ஏக்கர்) பரப்பு கொண்ட மனையில் குடியிருப்பு மனைகளாக பிரிவுகளுக்கான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்தல் – சார்ந்து.

பார்வை – 1) திருமதி. ஜோதி (ம) கமலாகர ரெட்டி பாபாதி, சேலை ரோடு, திருவள்ளூர் அவர்களின் கடித நாள். 01.10.2021.

2) உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர் அவர்களின் ந.க. எண். 1342 / 2021 / திருவள்ளூர் 2 நாள் 30.09.2021.

3) பொது நல உபயோகத்திற்கான தானப்பத்திர எண். 11965 / 23 / 15.09.2021.

4) இவ்வலுவலக கடித நாள். 06.10.2021.

5) சிறுவானூர் ஊராட்சி மன்ற தீர்மான எண். 46 நாள். 06.10.2021.

உத்தரவு –

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி பூண்டி ஊராட்சி ஒன்றியம், சிறுவானூர் ஊராட்சியில் வேடங்கிநல்லூர் கிராம சர்வே எண்கள் 109/1A, 2, 110/1, 2 3, 4, 5, 111/3Bல் 18935.0 ச.மீ (4.68 ஏக்கர்) கொண்ட பரப்பளவில் உள்ள மனையில் குடியிருப்பு மனைப்பிரிவுகள் அமைக்க வரைபட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு, திருவள்ளூர் அவர்களின் கடிதத்தின்படி மேற்படி பரப்பளவில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கும் பொருட்டு நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் பொது நல உபயோகத்திற்கான தானப்பத்திரத்தின்படி திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி சிறுவானூர் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய இனங்களுக்கான தானப்பத்திரம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 4ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் மேற்படி மனைப்பிரிவுகளுக்கான கட்டணங்கள் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளது.

B. Bhavani

R. Jyothi

பார்வை 5ல் காணும் இவ்வூராட்சி மன்ற ஒப்புதலின்படி மேற்படி மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கீழ்கண்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

1) நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோக மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019ல் குறிப்பிட்டுள்ள Residential Use ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிபாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை மெதரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7) 7,2 மீட்டர் அகத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8) மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய ம.வ / மா.ந.ஊ.உ.இ (திருவள்ளூர்) எண். 133 / 2021 ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
9) அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

B. Kally

R. Jyothi

10) மனுதாரர் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து ம.வ / மா.ந.ஊ.உ.இ (திருவள்ளூர்) எண். 133 / 2021 மனைபிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மமனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியுள்ளதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.


13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாளையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

தலைவர் / செயல் அலுவலர்
தலைவர் / செயல் அலுவலர்
சிறுவாணிர் ஊராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்
திருமதி ஜோதி (ம)
திரு. கமலாகர ரெட்டி பாபாதி,
எண். 5, ஜே. ஆர். ஆர். இல்லம்,
பி. எஸ். என். நகர்,
சேலை ரோடு,
திருவள்ளூர்.

நகல் -- உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர்

R. Jyothi



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate